**International Journal of Multidisciplinary Research and Development**
**Online ISSN: 2349-4182 Print ISSN: 2349-5979**
**www.allsubjectjournal.com**
**Volume 3; Issue 2; February 2016; Page No. 303-305**

# இனவரைவியல் - ஓர் அறிமுகம்

**க.பிரபாவதி**

முனைவர்பட்ட ஆய்வாளர், பாத்திமா கல்லூரி, மதுரை.

**சுருக்கம**

இனவரைவியல் உலகளவில் வளர்ந்து வரும் ஒரு துறையாகும். இந்தியாவில் ஜரோப்பியர் வரவால் 1770ல் தோற்றம் பெற்றது இனக்குழுவியல். 50 ஆண்டுகளுக்குப் பிறகே ஆர்வமுடையவர்களாலும், சமயத்தைப் பரப்புவதற்கு முயன்றவர்களாலும் வாய்மொழியாக வழங்கப்பட்ட இனவரைவியல் செய்திகள் எழுந்து வடிவம் பெற்றது. "கார்பினி என்பவர் மங்கோலியர்களின் வரலாறு" எனும் நூலில் மங்கோலியர்களின் பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறைகள் குறித்து எழுதியுள்ளார். இவ்வாறு ஆர்வாலர்களால் இனவரைவியல் ஆராயப்பட்டது. "1901 ஆம் ஆண்டு மனித இனவியல் ஆய்வினை இந்தியா முழுவதும் விரிவாக மேற்கொள்ள வேண்டும் என இந்திய அரசு ஆணை பிறப்பித்தது. இதன் மூலம் 1901-ல் இனவரைவியல் குறித்த சிந்தனை முக்கியத்துவம் பெற்றதை அறியலாம். தழிழகத்தில் துரை அரங்கசாமி எழுதிய சங்ககாலச் சிறப்புப் பெயர்கள் எனும் நூலில் சங்ககாலங்களில் வாழ்ந்த இனக்குழுவினரின் பட்டியல்கள் கொடுக்கப்பட்டுள்ளது. பக்தவத்சல பாரதியின் பண்பாட்டு மானிடவியல், தமிழர் மானிடவியல் நூல்களில் மானிடவியல் பற்றிய செய்திகளும், இனவவரைவியல் பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன. அரு.பரமசிவத்தின் தென்னிந்திய இன ஒப்புமையியல் நூலில் கள்ளர், பறையர், இடையர், ரெட்டியர், முதுவர் போன்ற இனங்களைப் பற்றிய தகவல்களைக் குறிப்பிட்டுள்ளார். இந்நூல்கள் இனவரைவியல் பற்றி தமிழில் வெளிவந்த ஆய்வுகள் ஆகும். இவ்வாறு இனவரைவியல் பற்றிய பல்வேறு ஆய்வு விபரங்கள் இக்கட்டுரையில் கொடுக்கப்பட்டு உள்ளது.

**Keywords:** organization, insurance, human resource and employees.

**முன்னுரை**

பண்டையக் காலங்களில் மக்கள் பல்வேறு இனக்குழுக்களாக வாழ்ந்தனர். இதற்கு புறநானூறு, பட்டினப்பாலை போன்றவைகளிலும் சான்றுகள் உள்ளன. காலத்தின் தேவைக்கேற்ப இனக்குழுவின் முதன்மை உணர்ந்து பல ஆய்வுகள் தோன்றின. இவ்வினக்குழு குறித்த ஆய்வு மானிடவியல் என உருப்பெற்றது. மானிடவியலின் ஒரு வகை இனவரைவியலாகும். "இனக்குழு ஆய்வியல்" என்று அழைக்கப்பட்ட "நுவாழெபசயிால" இன்று இனவரைவியல் என்ற பெயரில் குறிப்படப்படுகிறது. உலகளவில் சிறப்பிடம் பெற்ற இனவரைவியல், இந்தியாவில் அறிஞர்களால வரவேற்கப்பட்டு, தமிழகத்திலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மானிடவியல் விளக்கம்**

மானிடவியல் என்பது யுவொசழிழடழபல எனப்படுகிறது. "யுவொழிழள" "டழபழள" என்ற கிரேக்கச் சொற்களை மூலமாக் கொணடவையாகும். இச்சொற்கள் 'மனிதன், அறிவியல்' என்ற பொருட்களைக் குறிக்கின்றன. அதாவது "மனிதனைப் பற்றிய அறிவியல்" என்று பொருள்படும்.

"மனிதனை உயிரியல் நிலையிலும் பண்பாட்டு நிலையிலும் ஆராயும் ஓர் அறிவியல் துறையே மானிடவியல் ஆகும்" (வாழ்வியல் களஞ்சியம், 2009)

**மானிடவியவின் பிரிவுகள்**

1. உடல் சார் மானிடவியல் (ீலளளைஉயட யுவொசழிழடழபல)
2. பண்பாட்டு மானிடவியல் (ஊரடவரசந யுவொசழிழடழபல)
3. தொல்லியல் (யுசஉாயநழடழபல)
4. மொழியியல் (டுைபெரளைவைஉள)இந்நான்கு பிரிவுகளுமே தனித்தனி துறைகளாக இன்று வளர்ச்சி பெற்றுள்ளன. இனவரைவியல் தொடர்பான ஆய்வு பண்பாட்டு மானிடவியலின் ஒரு பிரிவாகும்.

**பண்பாட்டு மானிடவியல்**

பண்பாடு என்னும் சொல் மனிதனோடு தொடர்புடையது.

"பண்பாடு என்பது ஒரு குழுவினரின் வாழ்கை முறையாகும். அது மொழி மற்றும் பாவனைகள் மூலம் ஒரு சந்ததியினர் பிறிதொரு சந்ததிக்கு விட்டுச் செல்கின்ற பகிர்ந்து கொள்ளப்படும் கருத்துக்களின் தொகுதிகள் மற்றும் தேறிய நடத்தைகளின் மாதிரிகள் ஆகியவற்றைக் குறிக்கும். (பக்தசவத்சல ரெட்டி, 2003)

**இனக்குழுவியல்**

"இனக்குழுவியல் என்பது மனித நாகரீகத்தைப் பற்றிய விபரமான சிந்தனை அல்லது படிப்பு" என அமெரிக்கக் கலைக்களஞ்சியம் இனக்குழுவியல் பற்றி குறிப்படுகின்றது (அமெரிக்ககலைக் களஞ்சியம்)

"இனக்குழுவியல் என்பது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்களைப் பற்றி எழுதுதல் என்னும் பொருளை உணர்த்துகிறது" (பக்தவத்சல பாரதி, 2002)என்று பக்தவத்சல பாரதி இனக்குழுவியலை விளக்குகிறார்.

**இனவரைவியல் (நுவாழெபசயிால)**

சமுதாயப் பணபாட்டு மானிடவியலில் இனவரைவியல் முக்கிய இடம் பெறுகின்றது.

'இனவரைவியல்' என்பது நுவாழெபசயிால என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்றது. நுவாழெளஇ புசயிாநவை என்ற சொற்கள் கிரேக்கச் சொற்களை மூலங்களாகக் கொண்டவையாகும். 'நுவாழெள' என்பதற்கு 'இனம்', 'இனக்குழு', 'மக்கள்' என்று பொருள்படும்.. புசயிாநவை என்பதற்கு 'எழுதுவது' என்று பொருள்படும்.

அருகி வரும் குழுக்களின் பண்பாட்டுகள், பழக்கவழக்கங்கள் பற்றி எழுதுவதே இனவரைவியல் என விளக்கலாம்.

"இனக்குழுவியல் என்னும் பொருளுடைய நுவழெபசயிாலயை ஆங்கிலத்தில் நுவழெபசயிால என்றே வரையறுக்கிறார் பக்தவத்சல பாரதி" (பக்தவத்சல பாரதி, 2002)

"மானிடவியலின் முக்கிய பிரிவுகளுள் ஓன்றாக இனவரைவியல் (நுவழெபசயிால) அமைகின்றது. ஒரு குறிப்பட்ட மக்கள் குழு ல்லது பண்பாட்டை விவரிக்கும் கலை அல்லது அறிவியலே இனவரைவியலாகும்" (சிவசுப்பிரமணியன, 2009)

இனக்குழுவியலும், இனவரைவியலும் காலத்திற்கேற்ப பெயர்களில் மாற்றம் பெற்றாலும் பொருள் ஒன்றேயாகும்.

**இனவரைவியல் கூறுகள்**

1. புவிச்சூழலியல்
2. சுற்றுச் சூழல்
3. குாலநிலை
4. குடியிருப்பு முறை
5. உறைவிட முறை
6. பொருள் சார் பண்பாடு
7. குடும்ப அமைப்பு
8. திருமண முறை
9. வாழ்வியற் சடங்குகள்
10. மக்களின் உளவியற் பாங்குகள்
11. குழந்தை வளர்ப்பு முறை
12. பண்பாட்டுமயகாக்க முறை
13. மணக்கொடை
14. மணவிலக்கு
15. வாழ்க்கைப் பொருளாதாரம்
16. தொழிற் பகுப்பு முறை
17. உற்பத்தி முறை
18. நுகர்வு முறை
19. பங்கீட்டு முறை
20. பரிமாற்ற முறை
21. கைவிை0
22. னத் தொழில்கள்
23. அரசியல் முறை
24. அதிகார உறவுகள்
25. சமூகக் கட்டுப்பாடு
26. மரபு சார் சட்டங்கள்
27. சமய நம்பிக்கைகள்
28. சடங்குகள்
29. வழிபாட்டு முறைகள்
30. மந்திரம்
31. சூனியம்
32. விழாக்கள்
33. இசை
34. விளையாட்டுகள்
35. விழக்காறுகள்
36. ஈமச் சடங்குகள்

- (பக்தவத்சல பாரதி- பணப்பாட்டு மானிடவியல்- 1990)இந்த ஆசிரியர் குறிப்பிடும் இனவரைவியல் கூறுகளையே ஆ.சிவசுப்பிமணியம் அவர்களும் குறிப்பிடுகிறார்.

**இனவரைவியலின் பயன்**

- ஒரு குறிப்பிட்ட இனக்குழு மக்களைப் பற்றி முழுமையாக அறிய வாய்ப்பாகிறது.
- கள ஆய்வின் மூலம் செய்திகளை திரட்டுவதால் சமூக ஆவணமாகவும் திகழ்கிறது.
- இனவரைவியலாளர், இனக்குழு மக்களிடம் கலந்தாய்வு செய்வதால் அவர்களுக்கு உதவிகள் புரியலாம்.

**சங்க இலக்கியத்தில் இனவரைவியல்**

- சங்ககாலங்களில் இனக்குழு மக்கள் கூட்டு வாழ்க்கை வாழ்ந்துள்ளனர். இனக்குழுக்களின் தலைவர்கள் பெரும்பாலும் பழங்குடி இனத் தலைவர்களாகவே இருந்துள்ளனர்

"பாணர்கள் பண்டைக்காலம் தொட்டே பரிசில் பெறும் நோக்கோடு தான் பாடினார்கன். ஆகவே அவர்களுடைய பாட்டுடைத் தலைவர்களெல்லாம் பழங்குடி இனத் தலைவர்களே" (பி.டி.சீனிவாச ஐயங்கார், 1989) என சீனிவாச ஐயங்கார் குறிப்பிடுகிறார். தாய்வழிச் சமூகத்திலிருந்து தந்தை வழிச் சமூகமாக உருப் பெற்ற போது இனக்குழுக்கள் வளர்ச்சியடைந்தன.

1. "கூட்டுக்கிளையில் தாய்த்தலைமை காரணமாகத் தாய்த் தன்மை முதன்மை பெற்றது. ஆதி விவசாயப் பொருளாதாரம் அதற்கு அடிப்படைக் காரணம் எனலாம். கிராமததேவதைகள், அன்னை,

பேரன்னை ஆகியவற்றின் எச்சம் கி.மு. 3000 வரை காணமுடியும்'' (சுப்பிரமணியன்,1982)

**இக்கால இலக்கியங்களில் இனவரைவியல்**

- சிறுகதை, புதினம், கவிதை போன்றவற்றில் இனவரைவியல் தொடர்பான தகவல்கள இருந்தாலும், புதினத்தில் இனவரைவியல் பற்றிய செய்திகள் அதிகம் இடம் பெறக் காணலாம்.
- இனவரைவியல் தொடர்பான புதினங்களைப் படைக்கும் படைப்பாளர் 1.அனுபவம், 2. உற்றுநோக்கல், 3.ஆராய்ச்சி என்ற மூன்றின் அடிப்படையில் புதினங்களைப் படைக்கிறார்.

**இனவரைவியல் புதினங்களின் வகைகள்**

1. வட்டாரம் சார்ந்த புதினம்
2. திணை சார்ந்த புதினம்
3. இனம் சார்ந்த புதினம்

என இனவரைவியல் புதினங்களைப் பகுக்கலாம்.
"ஆரம்பகாலத்தில் வட்டாரம் சார்ந்தவை என்றும், தற்போது திணை சார்ந்தவை, இனம் சார்ந்தவை என்றும் பாகுபடுத்தலாம்'' (ஜெயமோகன் 2001)

**தொகுப்புரை**

பக்தவத்சல பாரதி, ஆ.சிவசுப்பிரமணியன், ஸ்டீபன் ஆகியோர் இனவரைவியலை இனக்குழு என்று அழைத்தாலும், ஆங்கிலத்தில் நுவாழெபசயிால என்கின்றனர். அதனால் இனக்குழுவியலும், இனவரைவியலும் காலத்தின் தேவைக்கேற்ப பெயர்களில் மாற்றம் பெற்றாலும் பொருள் ஒன்றே ஆகும்.
இக்கால இலக்கியங்களில் ஒன்றான புதினத்தில் இனவரைவியல் குறித்த பதிவுகள் அதிக அளவில் பதிவு செய்யப்பட்டுள்ளன.
படைப்பாளனின் தன்மைக்கு ஏற்றாற் போல் இனவரைவியல் புதினங்களில் செய்திகள் வேறுபடுகின்றன

**துணைநூற்பட்டியல்**


1. வாழ்வியற் களஞ்சியம் பதின்மூன்று, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.ம.பதிப்பு 2009É13
2. பக்தவத்சல ரெட்டி, நாட்டுப்புறவியல் கோட்பாடு, அடையாளம், புத்தாநத்தம், இ.பதிப்பு. 2012, 1-2
3. அமெரிக்கக் கலைக் களஞ்சியம், ப.201
4. பக்தவத்சல பாரதி சீ, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.மு.பதிப்பு. 2002É 81
5. சிவசுப்பிரமணியன ஆ, இனவரைவியலும் தமிழ் நாவலும், பரிசல் வெளியீடு, சென்னை. 2009É 120
6. கோவிந்தன், பி.டி. சீனிவாச ஐயங்காரின் தமிழர் வரலாறு, கழக வெளியீடு, மு.பதிப்பு.1989É 9
7. சுப்பிரமணியன், சங்ககாலச் சமுதாயம், ஹோீடீர், சென்னை, மு.பதிப்பு 1982É 26
8. ஜெயமோகன், மண்ணும் மரபும், தமிழினி பதிப்பகம், சென்னை, மு.பதிப்பு 2001É 90